**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.ii</u>**

**<u>இராமநாதபுரம்.</u>**

**முன்னிலை :** திரு. A. ஆதியான். B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 27–ம் நாள் புதன்கிழமை

**<u>Crl. M. P. No.504/2026</u>**

**<u>CNR NO. TNRM 02-001482-2026</u>**

விஜயராஜ், (வயது 29/2026)
த/பெ.மங்களராஜ் . . . மனுதாரர்/எதிரி

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
கேணிக்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 0241/2026
பிரிவு. 303(2) BNS . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 22.05.2026 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.ராஜா சாகுல் ஹமீது அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**<u>உ த் த ர வு</u>**

**2)** மனுதாரர்/எதிரி கேணிக்கரை காவல்நிலைய குற்ற எண்.0241/2026 பிரிவு 303(2) BNS வழக்கில் 20.05.2026–ம் தேதி முதல் நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை பிணையில் விடுவிக்கக்கோரி BNSS பிரிவு 480 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனுவின்பேரில் அரசுத்தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, பதில் பெறப்பட்டது. அரசு தரப்பில் பதிலில் எதிரியை பிணையில் விடுவித்தால் மீண்டும் திருட்டு குற்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும் வழக்கானது புலன் விசாரணையில் இருப்பதால் சாட்சிகளை மிரட்டக்கூடும் என்பதாலும் எதிரியானவர் வேறு காவல்நிலைய குற்ற வழக்குகளில் தேடப்படும் குற்றவாளியா என அறிக்கை பெற

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.27 12:01:13 +0530

வேண்டியுள்ளதாலும், எதிரியை பிணையில் விடுவித்தால் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகி சென்றுவிடுவார் என்பதாலும் எதிரியின் விரல் ரேகை இராமநாதபுரம் பதிவு கூடத்திற்கு அனுப்பி வேறு காவல்நிலைய குற்ற வழக்குகளில் எதிரியின் கைவிரல் ரேகை பதிவாகி உள்ளதா என அறிக்கை பெற வேண்டியுள்ளதாலும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர்/எதிரி கடந்த 8 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/எதிரி மீது எந்தவொரு முந்தைய குற்ற வழக்குகளும் இல்லை என்றும் மனுதாரர்/எதிரி நிரபராதி எவ்விதமான குற்ற செயலிலும் ஈடுபடாதவர் வேண்டுமென்றே பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை மனுதாரர்/எதிரி கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர் என்றும் மனுதாரர்/எதிரியை பிணையில் விடுதலை செய்யும் பட்சத்தில் தலைமறைவாகவோ அல்லது அரசு தரப்பு சாட்சிகளை கலைக்கவோ மாட்டார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் எவ்விதமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாகவும், எனவே எதிரியை பிணையில் விட உத்தரவிட வேண்டி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**5)** வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில் குற்ற எண். 0241/2026 பிரிவு 303(2) BNS ன் கீழ் எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன்விசாரணை ஆரம்ப கட்டநிலையில் உள்ளது என்பதாலும், இவ்வழக்கின் சூழ்நிலைகள், தன்மைகளை பரிசீலனை செய்கையில் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6)** முடிவில் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மே மாதம் 27–ம் தேதி புதன்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN

Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.27 12:01:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.